நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (20.09.2023) பெருநகர சென்னை பாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகள், பழைநீர் வடிகால் பணிகள், வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவான முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து தொடர்புடைய துகாறகளுடான ஆய்வுக்கூட்டம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலையைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணான், கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி,, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர், கூடுதல்/இணை/துணை ஆணையாளர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வி துறை மூலம் ரஷ்யா நாட்டிலுள்ள விண்வெளி ஆராய்ச்சி மையத்தை பார்வையிட செல்லும் சோமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி எஸ்.கார்த்திகாவுக்கு பயண செலவினத்தொகை ரூ.2 லட்சமும், பிரபஞ்சம் அகடமி சார்பில் உலக அளவில் இந்தோனேசியா நாட்டில் நடைபெற உள்ள கராத்தே போட்டியில் கலந்து கொள்ள இருக்கும் ஒன்பது மாணவர்களுக்கு பயண செலவாக ரூ.1 லட்சமும் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன், நகரச் செயலாளர் டி. பாபு உள்ளனர்.

### தொழில் முனைவோர் தொழிலை அபிவிருத்தி செய்ய

# சிட்கோ தொழில் மனைகளுக்கு பட்டா வழங்க சிறப்பு இ-சேவை முகாம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார்!

சென்னை, செப் 21-

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் 130 தொழிற்பேட்டைகள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. இத்தொழிற்பேட்டையில் அமையப் பெற்றுள்ள பெரும்பாலான நிலம் சிட்கோ பெயரில் மாற்றப் படாமல் சர்க்கார் புறம் போக்கு என்றே வருவாய் ஆவணங்களில் உள்ளது. சுமார் 60 ஆண்டிற்கும் மேலாக இப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்த தன் காரணமாக, தொழிற் முனைவோர்களால் பட்டா பெற இயலவில்லை. இதனால் தொழிற்முனைவோர் தங்களது தொழிலை அபிவிருத்தி செய்ய வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதில் சிரமம் இருந்து வந்தது.

இதற்கு தீர்வு காணும் விதமாக 30.11.2021 தேதியில் அரசாணை எண்.72 (குறு, சிறு மற்றும் நடுத்தரத்துறை நிறுவனங்கள் துறை) பிறப்பிக்கப்பட்டது. இதன்படி, இத்தொழிற்பேட்டைகளின் நிலங்களின் வகைபாடு அரசு புறம்போக்கு என இருந்ததனை இரயத்துவாரி என மாற்றம் செய்ய அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் கீழ் அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டு 09.02.2022 மற்றும் 19.09.2022 அன்று கூட்டப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையின் பேரில் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்ட மனைகளுக்கு மட்டும் நிலத்தின் வகைபாடு இரயத்துவாரி என மாற்றம் செய்து இரு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. இது வரை 1490.46 ஏக்கர் நிலத்தின் வகைபாடு இரயத்துவாரி மனை/ இரயத்துவாரி புஞ்சை என மாற்றம் செய்து தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக கிரைய பத்திரம் பெற்றுள்ள தொழில் முனைவோருக்கு முதலமைச்சர் அவர்களால் கடந்த 28.03.2023 அன்று தொழில் முனைவோர்களுக்கு பட்டா வழங்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டது. அதன்பின்பு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் 11.05.2023 அன்று கிரைய பத்திரம் பெற்ற 216 தொழில் முனைவோர்க்கு பட்டா வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கிரைய பத்திரம் பெற்றுள்ள தொழிற்முனைவோர்கள் விரைந்து பட்டா பெற வேண்டி மனு செய்ய ஏதுவாக 20.09.2023 அன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன தலைமை அலுவலக முதல் தளத்தில் தொழில்முனைவோர் பட்டா கோரி மனு செய்ய பிரத்யேக இ சேவை மையம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் கிரைய பத்திரம் பெற்றுள்ள தொழிற்முனைவோர் எளிதில் பட்டா பெற வழிவகை செய்யப்படுகிறது.

மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன தொழிற் பேட்டைகளில் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இதன் ஒரு பகுதியாக சென்னை, கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் மரம் நடும் நிகழ்வு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி.எஸ்.மதுமதி, மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### டி.கே.எஸ்.இளங்கோவன் பங்கேற்பு! நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது!

ஊட்டி, செப் 21-

திராவிட முன்னேற்ற கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, முத்தமிழ் அறிஞர் - சமூக நீதி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மிக சிறப்புடன் கொண்டாடிடும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் கழக கொடியேற்று விழா நிகழ்ச்சிகள், மருத்துவ முகாம்கள், ஆதரவற்ற இல்லங்களில் அறுசுவை உணவு கள் வழங்கும் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் கடந்த ஜூன் மாதம் முதல் நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் உதகை YWCA ஆனந்த கிரி கூட்ட அரங்கில் மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் அனைவரையும் வரவேற்றார். கருத்தரங்கத்தை கழக தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமசந்திரன் துவக்கி வைத்தார்.

கருத்தரங்கத்தில் கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் கலைஞர் ஒரு கருவூலம் எனும் தலைப்பிலும், மாநில மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் கலைஞர் ஓர் அறிவாலயம் எனும் தலைப்பிலும், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் பெருநற்கிள்ளி கலைஞர் ஓர் அறிவகம் எனும் தலைப்பிலும், கழக செய்தி தொடர்பு துணை செயலாளர் பொள்ளாச்சி சித்திக் கலைஞர் ஒரு நூலகம் எனும் தலைப்பிலும், ஈரோடு தெற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் ஈரோடு சத்தியவதி கலைஞர் ஓர் அன்பகம் எனும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முஸ்தபா, காசிலிங்கம், இளங்கோவன், திராவிடமணி, ராஜூ, எக்ஸ்போ செந்தில், மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம் ராஜா நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், இளஞ்செழியன் பாபு, ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, பரமசிவன், லாரன்ஸ், காமராஜ், கண்ணன், பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, பில்லன், ஷீலாகேத்ரின், ராஜேந்திரன், உதயதேவன், மோகன்குமார், ராஜா, செல்வம், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், சதீஷ்குமார், நடராஜன், ரமேஸ்குமார், சஞ்சீவ்குமார், சின்னவர், சுப்ரமணி, காளிதாஸ், மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம்சசிகுமார், விவேகானந்தன், ஆல்வின், காந்தல் ரவி, எல்கில் ரவி, ராஜா, வெங்கடேஷ், ஆலன், அன்வர் அப்துல்லா, ஜெயந்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நவுபுல், பாபு, பத்மநாபன், வினோத்குமார், முரளிதரன், நகராட்சி தலைவர்கள் வாணீஸ்வரி, ஷீலா கேத்ரின், சிவகாமி, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ராம்குமார், சுனிதா, கீர்த்தனா, மாயன், நாகராஜ், பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, ஜெயகுமாரி, கௌரி, சித்ராதேவி, ஹேமாமாலினி, வள்ளி, சத்தியவாணி, ராதா, உட்பட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் உதகை நகர செயலாளர் ஜார்ஜ் நன்றி கூறினார்.